**வத்தளை மாபோல நகர சபை - 2021**

-----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வத்தளை மாபோல நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள வத்தளை மாபோல நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தற்போது நீதிமன்ற பொறுப்பில் காணப்படுகின்ற லப்டொப் கணினி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் முக்கியமான கணக்கீட்டு கொள்கை மற்றும் ஏனைய விளக்கமளித்தல் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தல் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துதல் வேண்டும். |

### 1.6.2 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 18.7 மற்றும் LGD/10A/4/நகி/2019 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் பௌதீக பரிசோதனையின் போது இனங்காணப்பட்ட சபைக்குச் சொந்தமான 15 காணிகள் மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மீள் மதிப்பீடு செய்த கணக்கீடு செய்யப்பட்ட 02 காணிகளின் நில அளவு நிலையான சொத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட அளவினை விட 63.33 பேர்ச் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த குறைவான காணியின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 88,592,000 ஆகும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 5,052,550 மீண்டெழும் செலவினத்தில் ரூபா 3,798,073 மூலதன செலவினம் உள்ளடக்கப்பட்டமையால் செலவினம் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் சொத்துக்கள் அல்லது நடைமுறை வேலைகள் அப்பெறுமானத்தால் | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | முன்னைய ஆண்டின் கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட்ட ரூபா 108,500 சட்டத்தரணிக் கட்டணம் மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக 2021 ஏப்ரல் 23 ஆந் திகதி செலுத்தப்பட்ட ரூபா 108,500 தொகை கடன்கொடுத்தோர் ஏற்பாடு பதிவழிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்தல் தேவையற்றது என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் கழிவுப் பொருட்களை அகற்றும் கட்டண சிட்டையில் ரூபா 4,581,000 ஆக இருந்ததுடன் ஆண்டில் பெறுவனவுகள் ரூபா 2,142,850 ஆனமையால் ரூபா 2,438,150 மேலதிக சிட்டையிடலால் ஆண்டின் வருமானம் அப் பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வியாபார நிலையத்திலிருந்து அகற்றப்பட்ட கணனி முறைமையை நாளதுவரையாக்குவதற்கு குழுவொன்று நியமித்து மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத் தருகின்றோம். | - மேற்படி - |

### 1.6.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள 06 கணக்கு விடயங்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கு மீதிக்கும் உபயோக ஆவணங்களின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 98,891,470 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.5 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்களின் கீழ் 12 வருடங்கள் அளவிலான காலம் முதல் கணக்குகளில் முன்கொண்டு வரப்படுகின்ற 08 மதிப்பிழந்த காசோலைகள் ரூபா 241,564 ஆன மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 48,496,019 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 102,519,308 ஆகும்.

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 47,176,842 நிலுவை ஆதனவரி மீதியில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்ட தொகை ரூபா 9,205,267 ஆனமையால் அறவீடுகளின் சதவீதம் 20 சதவீதம் ஆகும். | நிலுவையை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத் தருகின்றோம். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2021 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 302,200 நிலுவை வேலை மற்றும் வியாபார வரி மீதி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்ட தொகை ரூபா 41,750 ஆனமையால் அறவீடுகளின் சதவீதம் 1 சதவீதம் மாத்திரம் ஆகும். | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் வருமானத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை வரையறுக்க வேண்டியேற்பட்டிருந்ததை அறியத் தருகின்றோம். | - மேற்படி - |

### 2.2.2 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஹெந்தல சந்தைத் தொகுதியில் உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தை விஞ்சி 15 கடைகள் அவதானிக்கப்பட்டதுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 813,968 மற்றும் உடன்படிக்கை மேற்கொள்ளாமல் மற்றும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடன்படிக்கை முடிவடைந்து மீண்டும் உடன்படிக்கை புதுப்பிக்காமையால் காலாவதியானதன் அடிப்படையில் வழக்கு தொடராமையின் காரணமாக ஹெந்தல வியாபார தொகுதியில் இறைச்சிக் கடையை பெற்றிருந்த 07 வாடகையாளர்களிடமிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 1,639,053 நிலுவை வாடகைப் பணம் சட்டரீதியாக அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | செல்லுபடியான உடன்படிக்கையின்றியதன் காரணமாக அது தொடர்பாக நடவடிக்கை எடுத்து உத்தியோகத்தர்களை இனங்காணல் பிரச்சினையாக இருந்தமை மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டு அது பிரதம செயலாளரின் சட்ட உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத் தருக்கிறோம். | சட்ட ரீதியான செல்லுபடி உடன்படிக்கையில் கைச்சாத்திடல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குரிய கட்டிடமொன்று கேள்வி கோரி வாடகைக்கு வழங்குவதற்கு பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தல் பிழையாக இருந்ததன் காரணமாக ரூபா 50,544 செலவில் மீண்டும் அறிவித்தல் பிரசுரிப்பதற்கு ஏற்பட்ட செலவான தொகையை அதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமான பரிசோதகரின் தாமத வழுவின் அடிப்படையில் கேள்வித் தொகை முன்னைய தொகையாகவும் அதன் காரணமாக 10 வருட காலமாக அவரிடமிருந்து அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இனங்கண்டு இந்த அறிவித்தலை சரி செய்யப்படுமென அறியத் தருகின்றோம். | செலவாகிய மேலதிக செலவினத்தை அதற்கு பொறுப்பு வாய்ந்த நபரிடமிருந்து அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஹெந்தல சந்தை தொகுதியில் இலக்கம் HM/41D மற்றும் HM/41C என்ற 02 கடைகள் ஒரு நபருக்கு அவரின் கோரிக்கையின் படி 2008 ஆகஸ்ட் 08 ஆந் திகதி கேள்வி கோரல் மற்றும் உடன்படிக்கையின் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்த துடன் வருமான பரிசோதகரால் இந்த கடைகள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்ததாக கூறி 2019 திசெம்பர் முதல் சிட்டையிடுதல் நிறுத்தப்பட்டிருந்தது, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவா்று நிலுவைத் தொகை முறையே ரூபா 234,878 மற்றும் ரூபா 465,112 ஆக இருந்ததுடன் 2020 யூன் 18 ஆந் திகதிய கம்பஹா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் இலக்கம் LGD/GM/1/7/பொது/U-07/2020 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் உடன்படிக்கை காலம் முடிவடைந்ததன் பின்னர் உடன்படிக்கை செய்யப்படாமையினால் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான இயலுமை காணப்படாதிருந்த மையால் அதற்கான மிகுதி நடவடிக்கைகளை எடுக்காத உத்தியோகத்தர்களை இனங்கண்டு சமர்ப்பிக்குமாறு அறிவித்திருந்த போதிலும் அவ்வாறு இனங்காணப் பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை முடிவடைந்த பின்னர் உடன்படிக்கை செய்வதற்கு மிகுதி நடவடிக்கைகள் எடுக்காத உத்தியோகத்தர்களை இனங்கண்டு அறிக்கை இடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதை குறிப்பிடுகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2.3 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| விற்பனைக் கடைகளில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிட வேண்டியதாக காண்பிக்கப்பட்ட கழிவுப் பொருள் அகற்றும் கட்டணம் நிலுவை மீதி ரூபா 11,810,498 ஆக இருந்ததுடன் கழிவுப் பொருள் கட்டணம், சேவை வழங்கல் கட்டணம் ஆனமையால் கழிவு அகற்றுதலை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இவ்வாறான நிலுவை மீதி காணப்பட்டமை தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணம் செலுத்தப்படாத நிறுவனத்தின் மூலம் கழிவுப் பொருட்களை பெற்றுக் கொள்ளல் கைவிடப்பட்டிருந்த போதிலும் இந்தக் கட்டணங்களை செலுத்தாத நிறுவனங்களை கணனி முறைமையிலிருந்து அகற்றாமையின் காரணமாக மாதாந்த சிட்டையிடலின் அடிப்படையில் நிலுவை மீதி காண்பிக்கப்படுகின்றது. முறைமையை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | நிலுவையை அறவிடுவதற்கும் கணக்குகளை சரி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 சனவரி 07 ஆந் திகதி ஏற்பட்ட விபத்து தொடர்பாக காப்புறுதி கம்பனியால் செலுத்துவதற்கு இணங்கப்பட்ட தொகை ரூபா 44,200 ஆக இருந்ததுடன் கராஜிற்கு செலுத்த வேண்டிய ரூபா 68,550 தொகையில் வேறுபாடான ரூபா 24,350 | மிகுதி தொகை சபை நிதியத்திலிருந்து வழங்குவதற்கு 2022 மார்ச் 18 ஆந் திகதி மாதாந்த சபைக் கூட்டத்தில் 5.1.8 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் 2022 ஏப்ரல் 19 | உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகையில் பரிசோதனை குழுவினால் 75 சதவீதம் சாரதியிடமிருந்தும் 25 சதவீதம் தொழில்நுட்ப உத்தியோகததரிடமிருந்தும் அறவிடுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும் சபையால் அந்த பரிந்துரை கைவிடப்பட்டு சபை நிதியத்திலிருந்து செலுத்துவதற்கு 2022 மார்ச் 18 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. | ஆந் திகதி மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஆலோசனை வழங்குமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு (மே.மா) அறிவிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆகஸ்ட் 22 ஆந் திகதி ரூபா 9,475,000 தொகையில் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட 01 ஏக்கர் 29.50 பேர்ச் அளவான காணி கொள்வனவின் போது அதன் தீர்த்தல் உரித்தை பெற்று கொள்வனவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அதில் அனுமதியற்ற 03 வீடுகளில் குடியிருப்பவர்களுடன் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் காணியை சுற்றி மதிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த 03 வீடுகளுக்காக மின்சாரம் வழங்கப்பட்டிருந்தமையால் அந்த மின்சாரத்தை பெற்றுக் கொள்ளுதல் சபையின் அனுமதியுடன் இடம்பெற்றிருந்ததுடன் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2021 பெப்ரவரி 23 ஆந் திகதி சபைத் தீர்மானத்தின் படி நகர சபைக்கு வாடகைத் தொகையை அறவிடக் கூடிய முறைமையொன்று அந்த வீட்டில் குடியிருப்பவர்களுக்கு வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. வாகன தளமொன்றை நிர்மாணிப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் போது 2022 ஆம் ஆண்டின் பாதீட்டின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த | பரீட்சித்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை சபைக்கு அறிவிக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் (மே.மா) இனால் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் (கம்பஹா) இற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்து சபையின் தீர்த்து வைத்தல் குறித்து உறுதிப்படுத்துதல் வேண்டும். |

போதிலும் இந்த 03 வீடுகளும் அமைந்திருந்தமையால் அந்த பிரச்சினைகளை தீர்த்து வைக்காமல் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டமையால் இந்த நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 766,987 தொகையும், சேவையை விட்டுச் சென்ற 96 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 251,466 தொகையும் மற்றும் வேறு இடங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 383,788 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 1,402,241 தொகை அறவிடப்படாமல் காணப்பட்டதுடன் அந்த மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத் தருகின்றோம். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |